மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிற நடைமுறை என்னவென்றால், பெரிய கட்சிகளுக்கு அவரவர்களுக்கு உரிய நேரத்தைக் கொடுத்துவருகிறோம். சிறிய கட்சிகளுக்கும் அவர்களுக்குரிய நேரத்தைக் கொடுத்து திருப்திபடுத்துகிறோம். பெரிய கட்சிகள் தங்கள் நேரத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும்—தியாகம் செய்ய வேண்டும் என்றால் பிரச்னை வந்துவிடும். ஆகவே அந்த நிலைக்குப் போகாமல் இருக்கிற நேரத்தைக் கணக்கிட்டு ஓரளவு பங்கிட்டுக் கொடுத்து பிரச்னை எழாமல் அவையை நடத்திச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. எனவேதான் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு, நேற்று அந்த மானியத்திலே அந்தக் கட்சி பேசியது, இந்த மானியத்திலே நீங்கள் பேசுங்கள் என்பதாகக் கேட்டுக் கொண்டு அவர்களைச் சமாதானப்படுத்தி அவையை நடத்திச் செல்கிறோம். அவர்களும் ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அடுத்து கட்சித் தலைவர்களது வேண்டுகோளுக்கிணங்க, அவசரம் முக்கியத்துவம் கருதி இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 58-ஐத் தளர்த்தல்.

[முற்பகல் 10–30.]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதிக்கப்பெறலாகாது என்கிற தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 58—ஐ இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(அ) மதுரை தியாகராயா பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் தியாகராயா பொறியியல் கல்லூரியின் இரு மாணவர்கள் பிரிவுக்கிடையே மோதல் ஏற்பட்டதன் விளைவாக இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளதால்